# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF ADDITIONAL DISTRICT MUNSIF, TENKASI.

O.S.No.88/2023

Deposition of witness for PW3

| | | |
|---|---|---|
| Name | : | செய்யது அலி பாத்திமா மில்லத் |
| Father's Name | : | ராஜா முகம்மது |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | 41 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 20.11.2025.

முதல் விசாரணை:

நான் தற்போது தலைமை உதவியாளராக தென்காசி சார்ஆட்சியர் அலுவலகத்தில் பணிபுரிந்துவருகிறேன். நீதிமன்றத்திலிருந்து வருவாய் கோட்டாட்சியருக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையின்அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் கோரப்பட்டுள்ள ஆவணங்களையும் கொண்டு வந்துள்ளேன். **சார்ஆட்சியர் எனக்கு அளித்த Authorization letter சா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

27.01.2023 தேதியில் வாதி பதிவு தபாலுடன் எங்கள் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட மனுவினை 30.01.2023 பெற்றுக்கொண்டு மேற்படி மனுவில் தென்காசி மாவட்டம், தென்காசி தாலுகா, குலசேகரப்பட்டி கிராமம் சர்வே எண்.530/2 பி–யை பொறுத்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் எதிர்மனுதாரர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது, எதிர்மனுதாரர் வராத காரணத்தினால் மேல்நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேலும் இது தொடர்பான சாட்சிசம்மன், வாதியால்

அனுப்பப்பட்ட மனு, சார் ஆட்சியர் எனக்கு வழங்கிய Authorization letter, பட்டா எண்.756 சான்றிட்ட நகல், தென்காசி சார் ஆட்சியர் அலுவலருக்கு, கிராமநிர்வாக அலுவலர் குலசேகரப்பட்டியால் அனுப்பப்பட்ட கடிதம் அத்துடன் இணைக்கப்பட்டுள்ள அடங்கல் சா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி மனுவின் அடிப்படையில் மனுதாரர் மகாலிங்கத்திற்கு மட்டுமே அறிவிப்பு அனுப்பப்பட்டது. மேற்படி மனுவின் அடிப்படையில் கிராமநிர்வாக அலுவலரிடமிருந்து, வருவாய் வட்டாட்சியர் ஏதேனும் நேரடியாக விசாரணை செய்தாரா என்றால் மனுதாரரே ஆஜராகாததால் அதன்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேலும் நாங்கள் கிராமநிர்வாக அலுவலருக்கும், வட்டாட்சியருக்கும் அறிவிப்பு அனுப்பியிருந்தோம் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பை கிராமநிர்வாக அலுவலரோ, வட்டாட்சியரோ பெற்றுக்கொண்டது சம்பந்தமாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி புல எண்ணில் தீர்வை செலுத்திய நபர்களின் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளோம். நான் தாக்கல் செய்துள்ள தீர்வையும், பட்டாவும் மனுவுடன் எங்கள் அலுவலகத்தில் பெறப்பட்டது என்றும், அழைப்பாணை மனுவில் கண்ட தீர்வை ரசீதுகளை கொண்டுவரவில்லை என்றால் சரியல்ல. 2 ஆண்டுகளாக யாரும் தீர்வை செலுத்தவில்லை. சா.சா.ஆ.2 ஆவணத்தில் இணைக்கப்பட்டிருக்கும் தீர்வை ரசீதுகளை வாதிதான் தீர்வை செலுத்தியுள்ளார். சா.சா.ஆ.2 ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டாவில் பிரதிவாதியின் பெயர் மாற்றம் செய்யப்பட்டதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. இதுதொடர்பாக வட்டாட்சியர் அலுவலகத்தில்தான் இருக்கும்.

(சா.சா.ஆ.2 அசலுடன் ஒப்பிட்டு பார்த்தபிறகு குறியீடு செய்யப்படுகிறது)

**குறுக்குவிசாரணை (பிரதிவாதி தரப்பில்)**

1. வருவாய் தீர்வையை சொத்தின் உரிமையாளர் தான் செலுத்தவேண்டும் என்ற கட்டாயம் இல்லை என்றாலும், யார் செலுத்தினாலும் பெற்றுக்கொள்வோம் என்றாலும் சரியல்ல, மேற்படி பட்டாவில் உள்ள நபரின் குடும்பத்தார் செலுத்தினாலும் பெற்றுக்கொள்வோம்.

2. வாதி தாக்கல் செய்த மனுவின் மீது வழக்கு நிலுவையில் இருப்பதாலும், வாதி ஆஜராகவில்லை என்பதாலும் நடவடிக்கை எடுக்கவில்லை. சுந்தரநாடார் வாரிசு அடிப்படையில் பிரதிவாதியின் பெயர் கூட்டுப்பட்டாவில் சேர்க்கப்பட்டுள்ளது. அது சம்பந்தமான ஆவணங்கள் அழைப்பாணையில் கேட்கப்படாததால் அதை நான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவில்லை.

3. சா.சா.ஆ.2 ல் இணைக்கப்பட்டிருக்கும் அடங்கலில் சுந்தரநாடார் வகையறா என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.